DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

MCOP. No. 68/2022

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents –RW1

| | | |
|---|---|---|
| Name | : | பத்ரோஸ் |
| Father Name | : | தங்கநாடார் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2023.

முதல் விசாரணை–

நான் தற்போது உச்சிப்புளி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கில் சாட்சி சொல்ல ஆய்வாளர் என்னை பணிந்துள்ளார். எங்கள் காவல் நிலைய குற்ற எண்.317/2021 என்ற வழக்கில் விபத்து சமயத்தில் TN 65 AB 2629 என்ற இருசக்கர வாகனத்தை விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் ராஜேந்திரன் என்பவர் சாலையோரத்தில் நின்று கொண்டிருந்த TN 72 T 4488 என்ற வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளானார் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 23.04.2022 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யும்போது மேற்படி ராஜேந்திரன் என்பவர் இறந்துவிட்ட காரணத்தால் வழக்கு அறுந்து போனதாக இறுதி

அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளரால் சான்றிடப்பட்ட இறுதி அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அந்த அறிக்கை எ.ம.சா.ஆ.1.

<u>மனுதாரர் குறுக்கு விசாரணை</u> –

இந்த வழக்கில் TN 72 T 4488 என்ற வாகனத்தை ஓட்டிய விஜயகுமார் என்பவர் தான் புகார்தாரர் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் நேரம் 10.07.2021ம் தேதி காலை 11.45 என்றால் சரிதான். புகார் மதியம் 01.00 மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்திற்கும் விபத்து நடந்த இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 5 கிமீ என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திலிருந்து சுமார் 5 நிமிடத்தில் காவல் நிலையத்திற்கு வந்துவிடலாம் என்றால் சரிதான். புகாரில் 10.07.2021ம் தேதி இரவு 01.00 மணியளவில் இராமேஸ்வரம் கடற்கரையில் திதி கொடுப்பதற்காக என் ஓனரோடு சொந்தக்காரர்களின் குடும்பத்தை சேர்ந்த அம்சவள்ளி, பாண்டியம்மாள், புவனா, பிரியா, தீபக் மற்றும் 2 குழந்தைகளோடு இராமேஸ்வரம் வந்து திதி கொடுத்துவிட்டு காலை சுமார் 08.30 மணிக்கு இராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் கீழே விழுந்த மேற்படி ராஜேந்திரனை 108 ஆம்புலன்ஸில் ஏற்றிவிட்ட பின்னர் தான் புகார் கொடுக்க வந்ததாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். புகாரில் உள்ள சாட்சிகள் அனைத்தும் புகார்தாரருடன் காரில் பயணம் செய்தவர்கள் என்றால் சரிதான். இறந்துபோன இராஜேந்திரனின் மனைவி மற்றும் உறவினர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இறந்துபோன இராஜேந்திரன் வாகனத்தை ஓட்டிச் சென்றபோது அவருக்கு முன்னால் சென்று கொண்டிருந்த புகார்தாரரின் வண்டியை எந்தவித முன்னெச்சரிக்கையும் இல்லாமல் திடீரென பிரேக் போட்டதால் இராஜேந்திரன் அந்த வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றும் இது சம்மந்தமாக இறந்துபோன இராஜேந்திரனின் மனைவி எங்கள் காவல் நிலையத்தில் FIR தவறாக உள்ளது என்று மனு கொடுத்தார் என்றால் அத்தகைய மனு எதுவும் வழக்குக் கோப்பில் இல்லை என்றும் அவ்வாறு இராஜேந்திரனின் மனைவி மனு கொடுத்தார் என்றும் அந்த மனுவானது வழக்கிற்கு எதிராக இருந்ததால் அதன் மீது நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சரியாக புலன்விசாரணை செய்யாமல் இறந்தபோன நபர் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.